பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 23 சனிக்கிழமை (05-06-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 189

# அவசரகாலச் சட்டம் தெற்கில் நீக்கப்படும்?

## வடக்கு-கிழக்கு பகுதிகளில் மட்டுமே தொடர்ந்து அமுல்

கொழும்பு, ஜூன் 5

அவசரகாலச் சட்டத்தைத் தென்னிலங்கையில் நீக்கிவிட்டு, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டுமே தொடர்ந்து அமுல் செய்வது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது

இத் தகவலை, இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவைச் சேர்ந்த வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவைச் சேர்ந்த இருபது நாடுகளின் தூதுவர்களை, ஜனாதிபதி திரு. விஜேதுங்கா கடந்த புதன்கிழமை (2 ஆம் திகதி) அழைத்துப் பேசினார். அப்போது திரு. பிரட்மன் வீரக்கோனும் கூட இருந்தார்.

பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட

# இந்திய இராணுவ உதவியை கோர இலங்கை அரசு முடிவு?

## கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேச்சு

கொழும்பு, ஜூன் 5

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டையில் ஈடுபட இந்திய இராணுவத்தின் உதவியைக் கோருவது என்று இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் மிகவும் பரபரப்பாக பேசப்படுகின்றது.

— இப்படி வெரித்தாஸ் வானொலி தனது தாயகச் செய்தியில் தெரிவித்தது.

அண்மையில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்ட எம். பிக்கள், கையெழுத்திடாத ஓர் அறிக்கை சுற்றுக்கு வந்தது கண்டு வியப்படைந்தனர்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் கூட்டாகச் சேர்ந்து தயாரித்ததாகக் கூறப்படும் இந்த அறிக்கை இந்திய இராணுவத்தை இலங்கைக்கு மீண்டும் அழைக்க வேண்டும் என்று கோருகின்றது.

இந்திய இராணுவத்தின் உதவியுடன் விடுதலைப் புலிகளை அடக்குவது குறித்து இலங்கை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்கிற செய்திகள் சிங்கள பத்திரிகைகளிலும் பரவலாகப் பிரசுரமாகி வருகின்றன.

இவை எல்லாம் திரிக்கப்படுகின்ற செய்திகள் என்ற கருத்தும் இருக்கிறது.

— இவ்வாறு 'வெரித்தாஸ்' வானொலி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## இலங்கைஉதவிகோரவில்லை இந்தியத் தரப்பு கூறுகிறது

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிடுவதற்கு இந்திய இராணுவ உதவியைக் கோரும் கோரிக்கை எதையும் இலங்கை அரசு முன்வைக்கவில்லை என்று இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆனால் பெயர் கூறவிரும்பாத இலங்கை உயர் அதிகாரிகளோ, விரைவிலேயே அப்படி கேட்கக் கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது என்றனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-எ)

## மீட்பு நிதி

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழீழ மீட்பு நிதிக் கட்டணை இதுவரை செலுத்தத் தவறியோர் நாளை முற்பகல் 9 மணிமுதல் 10 மணி வரையும் நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் அதனைச் செலுத்தலாம் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ-5)

### விசேட உயர்தரப் பரீட்சை:

# நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் புதிய வெட்டுப்புள்ளி நிலை

1991 ஏப்ரலில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட விசேட உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களின் பொறியியல் பீடங்களுக்கு அனுமதிப்பது தொடர்பான புதிய வெட்டுப்புள்ளி நிலை குறித்து கொழும்பிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் 1990 ஆகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சையையும் —

வடக்கு - கிழக்கில் 1991 ஏப்ரலில் நடத்தப்பட்ட விசேட பரீட்சையையும் ஒன்றாகக் கணிக்க வேண்டும் — என்று நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னரே புதிய வெட்டுப் புள்ளி நிலை பற்றி முடிவு செய்யப்பட்டிருக்கிறது

பொறியியல் I (பேராதனை) — 275 புள்ளிகள், பொறியியல் I (மொறட்டுவை) — 280 புள்ளிகள், பொறியியல் II (மொறட்டுவை) — 265 புள்ளிகள் என தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது. [உ]

## தெற்கில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, ஜூன் 5

தெற்கில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் பல இடங்களிலும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. வறக்காப்பொளை பகுதியில் பெரும் மண்சரிவு ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. இப் பகுதி மக்கள் பெரும் பீதி கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-6]

### பிரேமா கொலையாளிக்கு

# தமிழ் வர்த்தகர்கள் சிலர் நிதியுதவி வழங்கினராம்!

கொழும்பு ஜூன் 5

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் தற்கொலைப்படை வீரர் குலசிங்கம் வீரகுமாருக்கு கொழும்பு நகரின் பல தமிழ் வர்த்தகர்கள் நிதியுதவி செய்துள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கொலைத் திட்டத்தைக் கச்சிதமாக நிறைவேற்றுவதற்காக விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்தின் கட்டளைக்கிணங்க அவர்கள் நிதியுதவி செய்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர்

பிரேமதாசவுக்கு நெருக்கமானவர்களுடன் நட்புக் கொள்ள கொலையாளி இந் நிதியைப் பயன்படுத்தினார் என்றும் கூறப்பட்டது.

# தமிழக பொலீஸ் உதவியுடன் பிரேமா கொலை விசாரணை!

கொழும்பு, ஜூன் 5

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை தொடர்பான புலன் விசாரணைக்கு தமிழ்நாடு பொலீஸாரின் உதவியை கொழும்பு பொலீஸ் திணைக்களம் கேட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையும் பிரேமதாசா கொலையும் ஒரே பாணியில் நடத்தப்பட்டிருப்பதால், பிரேமதாசா கொலை பற்றிய விசாரணையில் தமிழ் நாடு பொலீஸார் உதவியாக இருப்பார்கள் என்று சி ஐ டி பிரதிப் பொலீஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ஷ செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஓ-எ)

# புதிய கட்சி ஆரம்பிக்க ஹேமா பிரேமதாச முடிவு

கொழும்பு, ஜூன் 5

கொலையுண்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாசா புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக கொழும்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமது கணவரின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் புதிய கட்சியை ஹேமா ஆரம்பிக்கவுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன

பிரேமாவின் விசுவாசிகளான அமைச்சர்கள் சிறிசேன குரே, வீரசிங்க மல்லிமாராச்சி மற்றும் ஐ. தே. க வின் எம்.பிக்கள் சிலர் ஹேமாவுக்கு பக்கபலமாகச் செயற்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளும் கட்சியின் ஆதரவாளர்கள் பலர் புதிய கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கலாம் என நம்பப்படுகிறது.

புதிய கட்சிக்கு ''சுசரித்த மறுமலர்ச்சி முன்னணி'' என்று பெயரிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-6)

# பிரேமாவிடம் இருந்த தீர்வுத் திட்டம் என்ன?

கொழும்பு, ஜூன் 5

மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் இனப் பிரச்சினைக்கான சில யோசனைகளை வெளியிட காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா எண்ணியிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அந்த நீண்ட பேட்டியில் இந்த விடயம் குறித்து பிரதமர் ரணில் தெரிவித்திருப்பதாவது:-

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா தெளிவான யோசனைகளின் அடிப்படையில் செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் அவர் யோசனைகளை வெளியிட எண்ணியிருக்கலாம் என நம்பினோம். ஆனால் அவரின் மனதில் இருந்த யோசனைகள் எவை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் 10 ஆம் திகதி கூடும்

# தெரிவுக்குழு கூட்டத்திற்கு தமிழ் குழுக்கள் வருமா?

கொழும்பு, ஜூன் 5

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தெரிவுக்குழு மீண்டும் எதிர்வரும் வியாழக்கிழமை (10 ஆம் திகதி) கூடவிருக்கிறது.

இக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகள் மற்றும் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றுவார்களா என இப்போது கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மை கட்சிகள், சிறுபான்மை இன மக்களின் கருத்துக்களைப் புறக்கணித்து தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க முயற்சித்தமையால் விரக்தியடைந்து தமிழ்க் குழுக்கள் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறியது தெரிந்ததே.

இந்தத் தமிழ்க் குழுக்கள் அனைத்துக்கும் மீண்டும் தெரிவுக் குழுவில் பங்குபற்ற அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கடந்த கூட்டத் தொடர் முடிவுற்று புதிய

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தர் குருபூசை நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 5

திருஞானசம்பந்தர் குருபூசையும் விழாவும் நாளை காலை முதல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

காலை 7 மணி முதல் ஞானப்பால் பூஜை, திருஞானசம்பந்தர் மோட்சப் பதிகம்— புராண படனம், அபிஷேகம், பூஜை ஆகியவையும்—

மாலை 5 மணி முதல் பூஜை மணமகன் அழைப்பு, திருக்கல்யாணம், சிவஜோதி ஐக்கியம் ஆகியவையும் இடம் பெறும்.

### செல்வச்சந்நிதியில்

செல்வச்சந்நிதி அடியார் மடத்தில் நாளை நடைபெறும் குருபூசையில் மாணவர்களின் தேவார மனனப் போட்டி, சொற்பொழிவு மற்றும் மகேசுவர பூசை ஆகியவை இடம்பெறும்.

### ஆனைக்கோட்டையில்

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்சங்க விநாயகர் ஆலயத்தில் நாளை மாலை 4 மணிக்கு திருஞானசம்பந்தர் குருபூசை கொண்டாடப்படும்.

### நீராவியடியில்

யாழ். பாலர் கல்விக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள திருஞானசம்பந்தர் குருபூசை நாளை ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

தேவாரம், பண்ணிசை, சிறப்புச் சொற்பொழிவு, பரிசில் வழங்கல், பாலர் கலை நிகழ்ச்சிகள், திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி ஆகியவை அன்றைய தினம் இடம் பெறும்.

### ஏழாலையில்

ஏழாலை மேற்கு கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை நண்பகல் 12 மணிக்கு திருஞானசம்பந்தர் குருபூசையும் அன்னதானமும் நடைபெறும் மாலை 5 மணிக்கு சம்பந்தரின் அற்புதங்கள் பற்றி திரு. மு. ஞானப்பிரகாசம் உரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து பெரிய புராண படனமும் நடைபெறும்

### நல்லூரில்

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள திருஞானசம்பந்தர் குருபூசை நாளை காலை நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி ஆலயத்தில் நடைபெறும்.

அன்று அதிகாலை 4.30 மணிக்கு நல்லூர் நாயன்மார் கட்டு வெய்யிலுகந்த விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் திருஞானசம்பந்தர் திருவுருவ வீதியுலா 5.30 மணியளவில் சட்டநாதர் ஆலயத்தை வந்தடைந்ததும் குருபூசை ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து அற்புதப் பதிகம் முற்றோதல், திருமுறை இன்னிசை கானம், சொற்பொழிவு ஆகியவை இடம்பெறும்.

### ஹாட்லியில்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் சைவ மன்றத்தினரால், திருஞானசம்பந்த சுவாமிகளின் குருபூசை நாளை மறுதினம் கொண்டாடப்படவுள்ளது. சிறப்புச் சொற்பொழிவில் ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்னும் பொருளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. த. சிவகுமாரன் சிறப்புரை வழங்குவார்.

(த-க-155-100-45-69)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இராமநாதன் நுண்கலைக்கழகம்

## இசைமாணி, நாட்டியமாணி பல்கலைக்கழக அனுமதி 1992 / 93

மேற்படி பட்டப்படிப்புகளுக்கான அனுமதி என்னால் யூன் மாதம் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பின்வரும் கற்கை நெறிகளில் கற்பித்தல் இடம்பெறும்.

1. கர்நாடக இசை — வாய்ப்பாட்டு
2. பண்ணிசை
3. பரதநாட்டியம்
4. கர்நாடக இசை — வாத்தியங்கள் — வயலின், வீணை
5. மிருதங்கம்

அனுமதிக்கான நிபந்தனைகள்

1. க. பொ. த. (உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. க. பொ. த. (உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்று நான்காவது பாடத்தில் 25 புள்ளிகளுக்குமேல் பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றுடன் நான்கு பாடங்களிலும் மொத்தமாக 180 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். 1990/91 க. பொ. த (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக்கொள்ளப்படும்.

பல்கலைக்கழக மூதவையினால் ஆற்றுகைக் கலையில் அங்கீகரிக்கப்பட்ட பிற தகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சையில் தகுதிபெறல்வேண்டும்.

பல்கலைக்கழகப் பரீட்சைகள் உதவிப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவங்களில் மட்டுமே அனுமதி கோரலை நிரப்பி அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துக்கும் ரூபா 20/ செலுத்துதல் வேண்டும். தபால் மூலமாக விண்ணப்பப் படிவங்களை பெற விரும்புவோர் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் சுயவிலாசமிடப்பட்ட 23x10 செ. மீ. அளவிலான கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

— பதிவாளர்

[C/5214]

---

## விளையாட்டு நிகழ்வுகள்

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தின் சார்பில் யாழ். சர்வோதய சிரமதான இயக்கத்தின் உதவியுடன் நடத்தும் நீசன் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கோவில் மைதானத்தில் நடைபெறும். யாழ். மாநகர ஆணையாளர் திரு. வெ. பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

o o o

ஆவரங்கால் விவசாயிகள் ஒருங்கிணைந்து நடத்தும் 3 ஆவது மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரித்திடலில் நடைபெறும்.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக்கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள்:-

★ பிற்பகல் 3.30 மணி:- அளவெட்டி யுத் வி.க அணி எதிர் புங்குடுதீவு அம்பாள் வி.க. அணி

★ மாலை 4.30 மணி:- ஊரெழு றோயல் வி.க, அணி எதிர் திருநகர் யாழ். பாரதி வி.க. அணி

o o o

யாழ். ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இந்த ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய வி.க. அணியை எதிர்த்து கிப்ஸ் வி.க. அணி மோதும்,

o o o

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழகம் நடத்தும் இரண்டாவது வருடாந்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகுகிறது. இன்று நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் சென்றலைட்ஸ் நீல அணியை எதிர்த்து பற்றிசியன் அணி மோதும் இந்தச் சுற்றுப்போட்டியில் எட்டு கழக அணிகள்பங்கு பற்றுகின்றன. இன்று தொடக்கம் 18 ஆம் திகதிவரை சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும்,

## ஆலயங்களில்

கந்தரோடை ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் நிகழ்வில் இன்று மகேஸ்வர பூசையும் அன்னதானமும் இடம்பெறும்.

(உ-எ)

o o o

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் கோயில் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (த-100)

## 1,000 ரூபாவுக்கு நூல்கள் வாங்க வசதி

கொழும்பு, ஜூன் 5

யாழ். மாநகரப் பகுதியில் இயங்கும் சனசமூக நிலையங்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை வாங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

மூலதன அபிவிருத்தி நிதியின் கீழ் இப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், நூல்கள் கொள்வனவு செய்யும் பற்றுச்சீட்டை யாழ் மாநகர சபை ஆணையாளரிடம் ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-30)

## நாளை

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடந்த தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (த-3)

---

# 2 லட்சம் பாட நூல்கள் கப்பலில் வருகின்றன

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் ''குமாரி'' கப்பலில் 2 லட்சம் பாடப் புத்தகங்களும் எடுத்துவரப் படுவதாகத் தெரியவருகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கும் பாடப்புத்தகங்களில் முதல் தொகுதி வருட ஆரம்பத்தில் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டிருந்தன.

இரண்டாவது தொகுதி பாடப்புத்தகங்களே ''குமாரி'' கப்பலில் தற்போது எடுத்து வரப்படுகின்றன. (உ-3)

## 'சுதந்திரப் பறவைகள்'

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழீழ விடுதலைப் புலிகள் பெண்கள் பிரிவின் ''சுதந்திரப் பறவைகள்'' பத்திரிகை இன்று வெளிவருகின்றது.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பொதுபட்டமளிப்பு 1993 — 09 — 11

டிப்புளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்பின் டிப்ளோமாக்கள் முதுமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1993 - 09 - 11 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1993 - 07 - 15க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு
2. முது தத்துவமாணித் தேர்வு
3. முது கலைமாணித் தேர்வு
4. முது விஞ்ஞான மாணித் தேர்வு
5. கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் தேர்வு 1991
6. வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு 1991
7. வணிகமாணித் தேர்வு 1991
8. தொழில் நிர்வாக மாணித்தேர்வு 1991
9. சிறப்பு விஞ்ஞான மாணித்தேர்வு 1991
10. சிறப்புக் கலை மாணித்தேர்வு 1991
11. பொது விஞ்ஞான மாணித்தேர்வு 1991
12. பொதுக் கலைமாணி தேர்வு 1991
13. இசை / நாட்டியக் கலைமாணித் தேர்வு 1991
13. சித்த வைத்திய மாணி, சத்திர சிகிச்சை மாணித் தேர்வு

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும், மற்றும் விவரங்களையும், முத்திரை ஒட்டிய 23x10 செ. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட கடித உறையை உப பதிவாளர் / தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்குக் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்

[சி-5211]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

இராமநாதன் நுண்கலைக் கழகம்

இசைகலைமணி/ நாட்டியக்கலைமணி டிப்ளோமா பயிற்சி நெறியினை

## பயிலுவதற்கான அனுமதி 1992/93

மேற்குறித்த பயிற்சிநெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

தகைமைகள்:

1 விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்தி பெறாதவர்கள் வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4 இல் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரி 30-06-1993 அன்று 15 வயதிற்கு மேற்பட்டவராகவும் 25 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

28 - 05 - 1993 அன்று மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாதுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விவரங்களும், விண்ணப்பப் பத்திரமும் யாழ். பல்கலைக்கழகத்தில் சிறாப்பரின் கரும பீடத்தில் ரூபா 20/- செலுத்தி அல்லது நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு ரூபா 20/ இற்கான காசுக் கட்டளை ஒன்றினைப் பெற்று அத்துடன் உங்கள் சொந்த முகவரியிடப்பட்டு, முத்திரைஒட்டிய கடித உறை ஒன்றினை அனுப்புவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி

30 — 06 — 1993

— பதிவாளர்

(சி-5215)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நகர பொலீஸ் அதிகாரம்

# மாகாணசபைக்கு வழங்கப்படுமா?

கொழும்பு, ஜூன் 5

மாகாண சபைகளுக்கு பொலீஸ் அதிகாரங்களைப் பாரப்படுத்துவதற்காக 1990 ஜனவரியில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி — கொழும்பு மாநகர எல்லைக்குள்ளும் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பகுதி அதன் சுற்றாடல் பகுதிக்குள்ளும் பொலீஸ் அதிகாரங்களைப் பயன்படுத்தும் அதிகாரம் மேல் மாகாணசபைக்கு வழங்கப்படவில்லை.

சட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

1990 ஜனவரியில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம் இன்னமும் அமுல் செய்யப்படாது இருந்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் கூறின.

இச்சட்டத்தின்படி —

மாகாண பொலீஸ் ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும் அதிகாரத்தை மாகாணசபை பெறுகின்றது.

மாகாண பொலீஸ் பிரிவின் நியமனங்கள், இடமாற்றங்கள், ஒழுங்காற்று விசாரணைகள் நடத்தி தீர்ப்பு வழங்குதல் ஆகிய கடமைகளை இந்த ஆணைக்குழு செயல்படுத்தும்.

மாகாண முதலமைச்சரின் கருத்துடன்பாட்டுடன் மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபரை, பொலீஸ் மா அதிபர் நியமிப்பார் என்றும் —

இது விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்படின் ஜனாதிபதி, முதலமைச்சருடன் கலந்தாலோசனை நடத்தி பிரதி பொலீஸ் மா அதிபரை நியமிப்பார் என்றும் இச்சட்டம் கூறுகிறது [ஓ-எ]

## தமிழ் கற்க செஞ். அதிகாரிக்கு விருப்பம்!

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றுள்ள திரு. பியட் சுசஸ்ஸர் தாம் தமிழ் கற்க விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்களுடன் நேரடியாக அவர்களின் மொழியில் பேச நான் விருப்பம் கொண்டுள்ளேன் என்றும் —

இன்னும் ஆறுமாத காலத்துக்குள் தமிழ்ப் பத்திரிகைகளை வாசிக்கக்கூடிய அளவுக்கு தமிழ்மொழியைத் தன்னால் கற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ஓ-3)


## அச்சுக்கோர்ப்பாளர்கள்

ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவமுள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். வேலைத் திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். பூரண சுயவிவரங்களுடன் 07 – 06 — 1993 திங்கட்கிழமைக்கு முன்னர் மனுச் செய்யவும். விண்ணப்பங்களை உபசரிப்பாளர் கரும பீடத்திலும் நேரில் கையளிக்கலாம்.

முகாமையாளர் (ஆளணி),

**உதயன் வெளியீட்டகம்,**

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



உ

கோண்டாவில் கிழக்கு

**ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு**

25 - 05 - 1993 முதல் 05 - 06 - 1993 வரை

தொடர்ந்து 12 நாட்களும்

பெரிய புராணத் தொடர் விரிவுரை

நிகழ்த்திய திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

(அகில இலங்கை கம்பன் கழக உறுப்பினர்)

இன்று (05 - 06 - 1993) சனிக்கிழமை

இரவு 8-00 மணிக்கு

பாராட்டி தங்கப் பதக்கம் அணிவித்தும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்படுவார்.

பாராட்டு உரை வழங்குபவர்கள்:

சம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள்

வடமாநில கல்விப் பணிப்பாளர் –

திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள்

பேராசிரியர் திரு அ. சண்முகதாஸ் அவர்கள்

[தலைவர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்]

திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

(M. A யாழ். பல்கலைக்கழகம்)

திரு. க. குமாரதாசன் (யாழ் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[25974] — பரிபாலன சபை.



உ

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் துணை

ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மணே நம:

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 24 ஆம் நாள் (06-06-1993) ஞாயிற்றுக்கிழமை காலை 6 40 மணி முதல் 8-16 மணிவரையிலான மூல நட்சத்திரமும் மிதுன லக்கினமும் அமிர்தசித்தயோகமும் கூடிய

★ சுபமுகூர்த்தத்தில் ★

| | |
|---|---|
| அமரர் திரு. செ. இரத்தினசபாபதி– இரத்தினமணி தம்பதிகளின் | திரு. க. செல்லத்துரை — இராசேஸ்வரி தம்பதிகளின் |
| சிரேஷ்ட புதல்வன் | சிரேஷ்ட புதல்வி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **அன்புதாசன்** | **கலைச்செல்வி** |
| (ராசன்) | (கவிதா) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

ஸ்ரீ காமாஷி அம்பாள் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம் வண்ணை. ஸ்ரீ காமாஷி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு

★ அன்புடன் அழைக்கின்றோம். ★

வரவேற்புபசாரம்: மாலை 4·00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி இ. இரத்தினமணி, (தாயார்) | க. செல்லத்துரை தம்பதிகள், |
| செல்வன் இ. ஜதீஸ் (ரஞ்சன்) சகோதரர், | செல்வன் செ. திருமூர்த்தி (மூர்த்தி) சகோதரர், |
| பாதிரி கோவிலடி, | 25/8, அரசடி ஒழுங்கை, |
| கொக்குவில் கிழக்கு, | தட்டாதெரு, |
| குளப்பிட்டி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(இரு வீட்டார் அழைப்பு) (6233)



## முக்கிய அறிவித்தல்

தரம் நம்பிக்கை நாணயமுடைய

**புனிதா நகை மாளிகையை**

நேற்று 04 - 06 1993 முதல் இல. 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு மாற்றம் செய்துள்ளோம். இதை அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறியப்படுத்தவும்.

(6231) – உரிமையாளர்



மீண்டும் யாழ் நகரில்.

றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்

தேன்சிந்தும் ஐஸ் கிறீம் வகைகள்

- ஸ்பெசல் ஐஸ்கிறீம்
- புறூட் சலட் ஐஸ்கிறீம்
- சொக்லட் ஐஸ்கிறீம்
- வனிலா ஐஸ்கிறீம்

மற்றும் சர்பத், கிறீம்சர்பத், ஐஸ் கோப்பி அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு கோழிப் புரியாணி வகைகளுக்கும் மீண்டும் உங்களை அழைக்கின்றார்கள்.

- ஹோட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்

**ஹோட்டல் றொலெக்ஸ்**

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[25976]



சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

**பழைய மாணவர் ஒன்றியம்**

12 — 06 – 1993

முற்பகல் 9-00 பரியோவான் தேவாலயத்தில் நற்கருணை ஆராதனை

முற்பகல் 10-15 வருடாந்தக் கூட்டம் (கல்லூரி மண்டபத்தில்)

12-30 மதிய போசனம்

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

செயலாளர்,

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,

பழைய மாணவர் சங்கம்.

(சி-5212)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 01 – 10 – 1917

உதிர்வு: 06 – 05 – 1993

திருமதி

**தாமோதரம்பிள்ளை தில்லையம்மா**

(வண்ணையம்பதி சிவலிங்கப்புளியடி)

அன்பின் பிறப்பிடமே, பாசத்தின் உறைவிடமே!
நீங்கள் மறைந்து ஓர் திங்கள் ஆனதுவோ?
உங்கள் நினைவலைகள் நெஞ்சினில் சுழலுதம்மா!
பொறுமையின் இலக்கணமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய்,
சுடர் விட்டதீபம் சடுதியாய் அணைந்ததேனோ
நின்னை நினைத்தவுடன் கண்ணில் நீர்மணி திரளுதம்மா
ஆறுதல் சொல்லி எம்மை ஆற்றுவாரும் இல்லையம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

இன்று (05 - 06 - 1993) நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் கலந்து, பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

468/2, K K S. வீதி,

சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (2979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நீளமான காட்டுத்தடிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இ. அருட்செல்வன், 22, வெங்கடேஸ்வரா வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (சி-4787)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [25494]

Diabetics (நீரிழிவு) உள்ளவர்கள் பாவிக்கக்கூடிய முறையில் ஆட்டா மா, குரக்கன் மா, ஒடியல் மா விற்பனைக்கு உண்டு உங்கள் தேவைகளுக்கு அண்ணா கோப்பிக் கடை; யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில். [சி/4791]

### அம்பாள் திருமண சேவை

Dental Doctor 32 வயது, Teacher 32 வயது, Draughtsman 41 வயது ஆகியோருக்கு மணப் பெண்கள் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை, சி. சண்முகலிங்கம் ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் மேற்கு வீதி, நல்லூர். [25970]

### பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25587)

### பயிற்சி வினாத்தாள்

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு 4, ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் 06-06-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (25933)

### இலவச திருமண சேவை

38 வயது, அவிட்டம், U.K. M.Sc. Electrical, Electronic Engineer விவாகரத்துப் பெற்றவருக்கு படித்த மணப்பெண் தேவை இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (25911)

30 வயது, ஆயிலியம், செவ்வாய் 2, பிரான்ஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கயில் திருமணம் செய்து அழைக்கலாம். மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (25912)

### வெளிவந்துவிட்டது

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா விடை புள்ளி விவரத்துடன் விற்பனைக்குண்டு மேலும் விவரங்களுக்கு: 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-4720)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடன் விடை கிடைக்கும். ஜாதகம், குறிப்பு கைரேகை, எண்சோதிடம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (259 2)

### ஜாதக பலன்

உங்களுக்கு வெளிநாட்டு பிரயாண அதிர்ஷ்டம் உண்டா? சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்: சிவா, 712, நாவலர் வீதி, அரியாலை. (6235)

### வகுப்புகள்

City and Guilds of London Institute, 627 Quantity Surveying - Part - I வகுப்புக்கள் 07-06-93 இல் ஆரம்பமாகி திங்கள் புதன் கிழமைகளில் காலை 6-30 — 8 30க்கு நடைபெறும். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. [25912]

---

உ

அம்பாள் துணை

சுன்னாகம் - வரியப்புலம்

ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

காலம் 07 - 06 - 1993 (திங்கட்கிழமை)

காலை

அம்பிகைக்கு நவோத்தர சஹஸ்ர (1009) சங்காபிஷேகமும் விசேஷ பூசையும் ''நவசக்தி'' அர்ச்சனையும்.

பகல் அன்னதானம்

மாலை நிகழ்ச்சி

இரவு 6-00 — 8-00
விசேட பூசையும் அம்பிகை திருவீதி வலம் வருதல்
மேளக்கச்சேரி-
மல்லாகம் பாலகிருஷ்ணன் குழுவினர்

விசேட மேளக்கச்சேரி
இரவு 8-00 — 10-00
அளவையூர் நாதஸ்வர வித்துவான்
எஸ். எஸ் சிதம்பரநாதன் குழுவினர்

வில்லிசைக் கச்சேரி
இரவு 10-00 — 12 00
வில்லிசைப் புலவர் கலாவினோதன்
சின்னமணி குழுவினரின்
★ பார்வதி கல்யாணம்

இன்னிசை விருந்து
இரவு 12 00 — 2-00
திருமதி பார்வதி சிவபாதம் குழுவினர்

அடியார்கள் அனைவரையும் வருகை தந்து, பங்குபற்றி அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அம்பிகை அடியார்களும்,
நிர்வாக சபையினரும்.

(5941)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

இறுதிப் பிரிவு

## O/L SAT & SUN CLASSES

(பகல் 12 30 முதல் மாலை 5.00 மணி வரை)

எமது வழமையான தனித்துவம் வாய்ந்த யாழ். முன்னணி ஆசிரியர் குழு

ஆரம்பம்:

## 06 - 06 - 1993 [ஞாயிறு]

பகல் 12.30 மணி

★ புதிய அனுமதிகளை முன்கூட்டியே பெற்று, இறுதி நேர இட நெருக்கடியை தவிர்த்துக் கொள்ளவும்.

(சி-4793)

---

# பாராட்டுகிறோம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் மஹோற்சவ விழா இன்று (05 - 06 - 1993) வைரவ சாந்தியுடன் முடிவடைகின்றது. 25 - 05 - 1993 ஆம் திகதி கொடியேற்றம் ஆரம்பமாகி 03 - 06 - 1993 இல் கொடியிறக்கம் இடம்பெற்றது. பின் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற குறிக்கோளுக்கு இணங்க செயலாற்றிய பிரதம குரு சிவஸ்ரீ ஆறுமுக குருக்கள் மற்றும் கோவில் ஐயா ஸ்ரீலஸ்ரீ த. ரவீந்திரராசா ஐயா ஆகியோரின் சிவத்தொண்டைப் பாராட்டி கோண்டாவில் வாழ் மக்கள் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தியும், மலர் மாலை அணிவித்தும் கவிதையாலும் சொற்களாலும் பாராட்டி குரு வணக்கம் செய்தனர். இவர்கள் பணி எங்கும் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

— கோண்டாவில் வாழ் மக்கள்.

(25973)

---

## இரண்டாண்டு நினைவஞ்சலி ஓராண்டு நினைவஞ்சலி





**இ. இராமமூர்த்தி**

தோற்றம்: 14 — 04 — 1928
மறைவு: 18 — 11 — 1990

**திருமதி இராமமூர்த்தி சிவபாக்கியலட்சுமி**

தோற்றம்: 30 — 05 — 1928
மறைவு: 18 — 05 — 1992

திதி: 05 — 06 — 1993

அன்புத் தெய்வங்களே!
வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, எம்மையும் வாழ்வித்து, நின்னது வானுறையும் தெய்வத்துள் சங்கமித்து ஓரிரு ஆண்டாகியதோ! ஆறாத்துயரிலும் உங்கள் ஆன்மா அவனடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கும்;


மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
[illegible]

சோ. சண்முகராசா,
கைதடி தெற்கு, கைதடி.

(25967)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுறவு; 06 — 04 — 1917

விண்ணுறவு: 17 — 05 — 1992

## கார்த்திகேசு சபாரத்தினம்

(V. M. S. - சாரதி)

அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும், உறைவிடமான அன்பான ஐயாவே! எங்கள் குடும்ப விளக்கே! உங்கள் பொன்னான முகம்கண்டு அன்பான சொல்கேட்டு ஆண்டொன்றாகி விட்டதையா! உங்கள் நினைவு மட்டும் எங்கள் நெஞ்சங்களை விட்டென்றும் அகலாது; உங்கள் ஆத்ம சாந்திக்கு எங்கள் இதயமென்னும் கோயிலிலே மனமென்னும் விளக்கேற்றி அன்பெனும் மலர்தூவி அர்ச்சனை செய்கின்றோம்.

அன்பு மனைவி- றோசம்மா
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

15 ஆம் கட்டை,
உடுப்பிட்டி.

[25960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பூமி ஒன்றே; அதனைக் காப்போம்

இன்று ஜூன் ஐந்தாம் திகதி உலகச் சூழல் தினமாகும். சூழலைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும், கடமையையும் உலக மக்களுக்கு உணர்த்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை சூழல் தினத்தைப் பிரகடனப்படுத்தியது.

தேச எல்லைகளையும் கடந்து அனைத்துலக அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய ஐம்பதுக்கும் மேற்பட்ட உலகப் பிரச்சினைகளை ஐ. நா. சபை அண்மையில் இனங்கண்டுள்ளது. அவற்றில் பதினைந்துக்கும் மேற்பட்டவை சூழலைப் பாதுகாப்பது சம்பந்தமானவையாகும்.

பூமி ஒன்றே ஒன்று தான். அதனைப் பராமரிப்பதும் அதன் வளங்களைப் பகிர்ந்து கொள்வதும் மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டியவை. பூமியைச் செல்லப்பிள்ளையாகக் கருதி சீராட்டித் தாலாட்டி கவனமாகப் பாதுகாக்க வேண்டும். எங்கள் உலகச் சூழல் அனைத்து மக்களும் வாழும் வீடாகும் அது உடைந்து போனால் எமது உலக வாழ்க்கையே நிர்க்கதிக்குள்ளாகி விடும்.

வளியில் கரிய வி வாயுவின் வீதம் அதிகரிப்பதால் சீதோஷ்ண நிலைமைகளில் பெரும் மாற்றம்; அமில மழையும் வளி மாசடைதலும்; கடல் நீர், நில நீர் என்பன மாசடைதல்; மழை தரும் காடுகளை விவசாயம் மற்றும் மரத் தேவைகளுக்காக அதிவேகமாக அழித்தல் என்பன உலக மக்களை அச்சுறுத்தும் பிரதான சூழல் பிரச்சினைகளில் சிலவாகும்.

இவற்றில் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் வன வளம் அழிக்கப்படுதலும் அதனால் உண்டாகும் விளைவுகளுமே முதலாவது சூழல் பாதுகாப்புப் பிரச்சினையாக மாறியுள்ளது.

மரங்கள் கரியமில வாயுவை உறிஞ்சி எடுத்து விடுவன. அவை அழிக்கப்படும்போது வளி மண்டலத்தில் கரியமில வாயுவின் வீதம் அதிகரித்து சீதோஷ்ண நிலைகளில் மாற்றம் ஏற்படுகிறது நாம் இப்போது காணும் பருவமாற்றங்களும், குறைந்த மழையும் அதன் பெறுபேறுகளே.

ஆகையால் காடுகளை அழிப்பதை, மரங்களைக் கண்டபடி தறிப்பதை இயன்றளவு தவிர்க்கவும், தடுக்கவும் வேண்டும். அதே வேளை மரம் வளர்ப்பதில் தொடர்ந்து அக்கறையும், போதிய கவனமும் செலுத்தப்பட வேண்டும். மரங்களை வளர்ப்பதன் மூலமே மழையைத் தருவிக்க முடியும்.

நீர் நிலைகளை மாசுபடுத்தாதிருத்தல், எரிபொருள்களை அதிக அளவில் பயன்படுத்துவதால் வளி மண்டலத்தை மாசுபடுத்தல், மண் வளத்தைக் கெடுத்தல், நீரை விரயமாக்குதல், ஏனைய இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்தி பூமியை நலிவுறச் செய்தல் என்பனவும் தடுக்கப்பட வேண்டும்.

இந்தப் பூமி எல்லோருக்கும் சொந்தமானது. இப்போது வாழும் சந்ததியினருக்கு மட்டுமன்றி இனி வரப்போகும் எத்தனையோ சந்ததிகளுக்கும் சொந்தமாகப்போவது. எனவே பூமியின் வளங்களைக் கெடுத்து, இயற்கையை நலிவுறச் செய்ய எவருக்கும் உரிமையில்லை. அத்தோடு பூமியையும், அதன் வளங்களையும் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினரிடம் ஒப்படைக்கும் பாரிய பொறுப்பு உலக மக்கள் எல்லோருக்கும் உண்டு.

உலகச் சூழல் தினமான இன்று அதனை மனதில் இருத்தி சூழலை எல்லா வகைகளாலும் பாதுகாக்க சங்கற்பம் செய்வோமாக!

# சனசமூக நிலைய கண்காட்சி இரண்டாவது நாள் நிகழ்வு

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் நடத்தும் ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம் மற்றும் சித்த மருத்துவக் கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் காலை நிகழ்ச்சிகள் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சிகளுக்கு வைத்திய கலாநிதி பொ. சு. இராசரத்தினம் தலைமை வகிப்பார். 'சித்த மருத்துவம்'' என்ற பொருளில் வைத்தியர் கு. சங்கரப்பிள்ளை, வைத்திய கலாநிதிகள் பொ. சண்முகரட்ணம், பொ. இராமநாதன், இ. கனகலிங்கம், அ. வி. இராசரத்தினம், வைத்தியர்கள் எஸ். நல்லையா, எஸ். வரதன் ஆகியோர் உரையாற்றுவர்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் 3 மணிக்கு கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் ஆரம்பமாகும். ''1970க்குப் பின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி'' என்ற விடயம் பற்றி திருவாளர்கள் க. குணராசா, செ. திருநாவுக்கரசு, சி. சிவலிங்கராசா, மு. திருநாவுக்கரசு, ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்), பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை, வல்வை திரு. ந. ஆனந்தராஜ், செல்வி கே. சந்திரகுமாரி ஆகியோர் உரையாற்றுவர். [த]

## இன்று

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை ஒழுங்கு செய்துள்ள ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத் திறக்கை மவான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு நீர்வேலி ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும். (த–154)

○ ○ ○

பண்ணாகம் அண்ணாகலை மன்றத்தினர் மன்ற ஸ்தாபகர்களில் ஒருவரான பண்டிதர் ப. இராசகுருவின் பொன்விழாவை இன்று பிற்பகல் நடத்துகின்றனர். பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபை மண்டபத்தில் நிகழும் இவ்விழாவில் பொன்விழாச் சிறப்பு மலர் வெளியிடப்படுவதோடு பலர் பாராட்டுரை வழங்குவர். (அ–28)

# ரயில்வே அதிகாரசபை சட்டமூலம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 5

ரயில்வே திணைக்களத்தை ரயில்வே அதிகார சபையாக மாற்ற வகைசெய்யும் சட்டமூலம் ஒன்று இம்மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ரயில்வே அதிகாரசபைக்கு பணிப்பாளர் சபை ஒன்று நிறுவப்படும்.

ரயில்வே திணைக்களம், அதிகாரசபையாக மாற்றப்பட்ட பின்னரும், ரயில்வே ஊழியர்கள் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு அரசாங்க ஊழியர்களாக சேவை யாற்ற முடியும் என்றும்—

அதன் பின்னர் அவர்கள் விரும்பினால் ரயில்வே அதிகாரசபையில் சேர்ந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஆலோசனை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். மாவட்ட உணவு விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், ப.நோ.கூ. சங்கத் தலைவர்கள் பொது முகாமையாளர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ–5)

## கும்பாபிஷேகம்

மீசாலை தெற்கு அருள்மிகு ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது அன்று காலை 5.30 முதல் 6.15 வரையுள்ள சுப வேளையில் கும்பாபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிசேகத்தை யொட்டி நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரையும், ஆத்மஜோதி திரு நா. முத்தையா வாழ்த்துரையும் வழங்குவர்.

கும்பாபிஷேகத்துக்கு முன்னோடியான கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைபெற உள்ளன. (அ)

# எமது பெரும் வீடாகிய பூமியின் வாழ்வும் எதிர்காலமும் ஆபத்தில்!

எமது வீடுகளை நாம் சுத்தமாக வைத்திருப்பது போலவே எமது பெரிய வீடாகிய பூமிக் கிரகத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஆனால் பூமித் தாயின் பிள்ளைகளாகிய நாம் என்ன செய்துள்ளோம்?

தொழிற்றுறைப் புகை நகரங்களைச் சுற்றிச் சூழ்ந்திருக்கிறது; நச்சுக் கழிவுகளினால் நதிகளினதும் ஏரிகளினதும் நீர் அதன் பளிங்குத் தன்மையை இழந்துள்ளது; காடுகள் அழிக்கப்பட்டு வனாந்தரங்கள் ஆகியுள்ளன; பூமியின் உட்பகுதி உறிஞ்சி எடுக்கப்பட்டு வளமற்றதாகியுள்ளது.

பூமி எனும் கிரகத்தைப் பாதுகாக்க ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயற்கைத் தாய் கட்டி எழுப்பிய அமைப்பு சிதைக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாம் மனிதரின் நியாயமற்ற நடத்தையால் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது கிரகத்தின் வாழ்வும் எதிர்காலமும் ஆபத்தில் இருக்கின்றன.

சூழல் பற்றிய அக்கறையும் அறிவும் இன்று உலகில் வாழும் அனைவருக்கும் அவசியமாக இருக்கின்றன. உயிரியலாளர், புவியியலாளர், நிலவியலாளர் ஆகியோர் மாத்திரம் அல்ல கணிதவியலாளர், பௌதிகவியலாளர், இரசாயனவியலாளர், வரைவியலாளர், பொறியியலாளர் ஆகியோர் புவிச் சூழல் மாசுபடுவதைத் தடுத்து நிறுத்த அறிவியல் ரீதியான திட்டங்களை முன் வைத்து செயற்படுத்த வேண்டும்.

உலகளாவிய சூழல் மாசுபடும் பிரச்சினை எவ்வாறு தோன்றியது?

மனிதர் முன்னேறிய தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி இயற்கை வளங்களைத் தமது பாவனைக்கு உட்படுத்தினார்கள். இதனால் மனிதரின் வாழ்க்கை நிலைமைகள் விருத்தி அடைந்து வளம் ஏற்பட்டு நாகரிகம் வளர்ந்தது.

ஆனால் இயற்கையை வெல்லும் இந்த வளர்ச்சியின் போக்கில் மனிதர் தமது நடவடிக்கைகளின் இயற்கை அத்திவாரங்களைத் தகர்த்தனர்; சமூகத்துக்கும் இயற்கைக்கும் இடையிலுள்ள உறவைக் குழப்பினார்கள்.

தற்போது இந்த அன்யோன்யமான உறவை மீட்பது உயிரின வாழ்க்கைச் சூழல் இயலின் முக்கிய பணியாகியுள்ளது. இதற்கு முதன் முதலாக இயற்கையைப் பொறுத்த மனிதரின் ''பேராவுடன் உண்ணும்'' சிந்தனையை மாற்ற வேண்டும்.

மனிதர் அமுல்படுத்தும் திட்டங்கள் இயற்கை அமைப்பைச் சீர்குலைக்காதனவாய் இருக்க வேண்டும். இயற்கை வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்த மனிதர் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதன்படி புதிய இயந்திரங்கள், தொழில் நுட்பங்கள் பொருள்கள், நிர்மாணத் திட்டங்கள், உபகரணங்கள் ஆகியன உயிரின வாழ்க்கைச் சூழலுடன் ஒத்துப் போகின்றனவா என்பதைக் கணிப்பிட வேண்டும்,

விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியின் வளர்ச்சிகள் நாட்டுக்கு நாடும், கண்டத்துக்குக் கண்டமும் வேறுபடுகின்றன ஆனால் உலகரீதியான உயிரினச் சூழலுக்கு ஆபத்து ஏற்படுவது பொதுவானதோர் பிரச்சினையாக உள்ளது.

சூழலைப் பாதுகாப்பதற்கும் இயற்கை வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகள் உண்டு. இயற்கையைப் பாதுகாக்க உலகம் முழுவதுக்குமான ஒருமுகப்பட்ட வரையறை இருக்க வேண்டும்.

இயற்கையும் சமுதாயமும் பிரிக்கப்பட முடியாதவை. ஆகவே தான் உலக ரீதியில் உயிரினச் சூழலியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேசிய ரீதியான ஒருமித்த திட்டம் தேவையாகின்றது. மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே ஓர் உயிரியல், சூழலியல் ரீதியான சமரசத்தை ஏற்படுத்த மனிதரின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

★

- வீ. சி -

## சுகாதார எழுச்சி வாரம் இன்று ஆரம்பமாகிறது

உலக சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி யாழ். மாநகரசபைப் பகுதியில் இன்று முதல் ஒருவார காலத்துக்கு தேசிய சுகாதார வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தேசிய சுகாதார வாரத்தின் ஆரம்ப நாளான இன்று யாழ். மாநகரசபை நகர்ப்புற சுகாதாரத் தொண்டர்களின் ஏற்பாட்டில் எழுச்சி விழா ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு [illegible] ஆரம்பமாகும்.

சுகாதாரத் தொண்டர்களினால் உருவாக்கப்பட்ட சுகநலதீபம் என்னும் மலர் வெளியீட்டு நிகழ்ச்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் அங்கு இடம்பெறும்.

சுகாதாரத் தொண்டர் குழுத் தலைவர் திரு. கா. சிவன் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய எழுச்சி விழாவில் யாழ். மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பொ. இரட்ணசபாபதி, யாழ் மாநகரசபை சுகா[illegible] வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் உட்பட பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஒ–5]

## உலக சுற்றாடல் தின கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 5

உலக சூழல் சுற்றாடல் தினத்தை ஒட்டி ''சூழல் மாசடைதல், பேணுதல், அபிவிருத்தி'' ஆகியவை பற்றிய கருத்தரங்கு ஒன்று, இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பல்கலைக்கழக புவியியற் கழகம் ஏற்பாடு செய்துள்ள இக் கருத்தரங்குக்கு புவியியற்றுறை தலைவர் திரு செ. பாலச்சந்திரன் தலைமை வகிப்பார். பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி பா. சிவகடாட்சம், வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியன், பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (த)

## சூழல் நெருக்கடியிலிருந்து மீள சிந்தனையில் மாற்றம் தேவை

உலகம் ஆழமான சூழல் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. உயிரியல் இன வாழ்வு இயல்ரீதியில் தொடர்ந்து செய்ய முடியாத, சமூகரீதியில் அந்நியமாக்கும், பொருளாதாரரீதியில் நியாயமற்ற மனித நடத்தையால் தான் இது ஏற்பட்டுள்ளது. மனிதரின் சிந்தனையின் பொருளாதார, ஆன்மீக யதார்த்தங்களை ஒன்றிணைக்கும் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும். இதன் மூலம் பொதுவான மனித குல மனச்சாட்சி ஒன்று ஏற்பட வேண்டும்; சமநிலையும் அமைதியும் சமாதானமும் நீதியும் உள்ள உலகொன்றை மீட்டெடுத்து போஷிக்கும் மனச்சாட்சி ஒன்று ஏற்பட வேண்டும். அப்பொழுது தான் சமூகத்தின் தலைமையிலும் வழிகாட்டலிலும் தற்கால எதிர்கால சந்ததிகளின் நல்வாழ்வில் அக்கறை செலுத்த முடியும்.

வேறுபட்ட மக்கள் பொதுவானதோர் எதிர்காலத்துக்காகப் பாடுபடுவதற்கு ஐக்கியம் இன்றியமையாதது என்பதை ஏற்றுக்கொண்டு பூமியின் பிரசைகளாகிய நாம் சூழல் ஒழுங்கு பற்றிய சர்வதேசியக் கோட்பாட்டை முன்வைக்கின்றோம்.

[சூழல் ஒழுங்கு பற்றிய சர்வதேசியக் கோட்பாட்டின் முன்னுரை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா படை தளபதியுடன் செஞ். அதிகாரி பேசுவார்

## பலாலியில் சந்திப்பு நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் — செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிட புதிய பிரதிநிதி திரு. பியட் சுவஸ்ஸருக்கும் இடையில் அடுத்த வாரம் பலாலியில் பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன.

பதவியேற்ற பின்னர் திரு. சுவாஸ்ஸர் முதல் தடவையாக அடுத்த வாரம் பலாலி சென்று இராணுவ தளபதியுடன் பேச ஏற்பாடாகியுள்ளது.

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து வாகன அணி மூலம் குடாநாட்டுக்குள் உணவுப் பொருள்கள் எடுத்து வரும் விவகாரம் குறித்தும்—

யாழ் குடாநாட்டு மக்களின் தேவைகள் மற்றும் அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்தும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி இராணுவத் தளபதியுடன் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார். (ஓ-3)

# மரண அறிவித்தல்கள்

## வைத்தியகலாநிதி
## கதிரவேல் கெங்காதரம்பிள்ளை

சித்தன்கேணியைச் சேர்ந்த வைத்தியகலாநிதி கதிரவேல் கெங்காதரம்பிள்ளை 03-06-93 அன்று சிவபதம் அடைந்து விட்டார் இவர் சங்கானை கதிரவேல் மருந்துக்கடை உரிமையாளரும், முன்னாள் சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவரும் ஆவார்

அன்னார் தபோதினியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, லோகேஸ்வரி, Dr விக்கினேஸ்வரன் (ராகம அரசினர் போதனா வைத்திய சாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. இ. செல்வநாயகம் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), திரு க. விவேகானந்தராஜா (மக்கள் வங்கி சுன்னாகம்), திரு சி. திருவம்பலமயம் (கதிரவேல் மருந்துக் கடை சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும்—

காலஞ்சென்ற திருமதி கந்தையா இரத்தினம், காலஞ்சென்ற திருமதி கனகசபை இராசம்மா. மற்றும் திருமதி குமரையா சிவக்கொழுந்து, திருமதி அருணாசலம் பொற்கொடி (சிங்கப்பூர்), திருமதி பாலசிங்கம் அன்னம்மா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிரஞ்சலா, ஜானகி, தர்சினி, மதனராஜ், சுகிர்தலா, ஸ்ரீறாம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கெ. தபோதினி
[மனைவி]

வட்டுக்கிழக்கு
சித்தன்கேணி.

(25975)

## லெட்சுமி அம்மாள்

நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், 177/2, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா ஆச்சாரி லெட்சுமி அம்மாள் 1993 06-04 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் திருமதி கணபதி பழனியாச்சி (வட்டக்கச்சி), அமரர் அண்ணாமலை, திருமதி தங்கவேல்-மகேஸ்வரி (புசல்லாவை), திருமதி மூத்துலிங்கம்-கனகசுந்தரி (இரத்தினபுரி), சந்தனம் விசாலாட்சி (கிளிநொச்சி), நூர்சாமி பாக்கியம், ரெத்தினம், திருமதி சண்முகநாதன் - விஜயலெட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், கணபதி, திருமதி நாகரெத்தினம் தங்கவேல், மூத்துலிங்கம், சந்தனம், நூர்சாமி, திருமதி விஜயலெட்சுமி, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (1993-06-05) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
177/2, நாவலர் வீதி, சு. ரெத்தினம்
யாழ்ப்பாணம். (மகன்)

[25985]

## இரத்தினம் சின்னத்தம்பி

திருமதி இரத்தினம் சின்னத்தம்பி அவர்கள் காலமானார்.

இவர் கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற பண்டிதர் சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், தனலட்சுமி, கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), ஈஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை), சிவகாமதேவி (இளைப்பாறிய உடற்கல்வி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற விவாகப் பதிவாளர் தாமோதரம்பிள்ளை, சிவகுருநாதன் (இளைப்பாறிய கூட்டுறவு அதிகாரி), சிவஞானம் (M.S இன்டஸ்றீஸ், கோண்டாவில்), மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 5-06-93 கரவெட்டி திருப்பதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கட்டைவேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. சிவஞானம்
32, ஆடியபாதம் வீதி, (மருமகன்)
திருநெல்வேலி. (சி/5216)

## பாராட்டு விழாக்கள்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவ நாட்களில் பெரியபுராணத் தொடர் விரிவுரை நிகழ்த்திய திரு. ஆறு திருமுருகனுக்கு இன்று இரவு ஆலயத்தில் நடக்கும் பாராட்டு விழாவில் தங்கப்பதக்கம் சூட்டப்படுவதோடு, பொன்னாடையும் போர்த்திக் கௌரவிக்கப்படும்.

கொழும்புத்துறை மேற்கு மன்றுளாடும் விநாயகர் ஆலயத்திலும், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலும் மகோற்சவ தினங்களில் பெரியபுராணத் தொடர் விரிவுரை நிகழ்த்தியமைக்காக அவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாக்களும் இன்று மாலையில் நடைபெறவுள்ளன

(அ 17-30)

## தெரிவுக்குழு..:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், புதிதாகக் குழுவை நியமிப்பதற்கு கடந்த வாரம் பெயர் கோரப்பட்டது. மீண்டும் அதே உறுப்பினர்கள் தெரிவுக்குழுவுக்கு நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## பிரேமாவிடம் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்பது எமக்குத் தெளிவாகத் தெரியாது.

மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் — மக்களிடம் இருந்து ஆணையொன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் — வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளைப் புதிதாக ஆரம்பிக்கலாம் என்று இறுதியாக நடைபெற்ற ஐ. தே. க நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் நாம் நம்பிக்கையை இழந்து விடவில்லை. — இப்படி பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

## அவசரகாலச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1989 ஆம் ஆண்டில் அவசரகாலச் சட்டம் சில மாதங்களுக்கு நீக்கப்பட்டிருந்தது. எனினும் ஜே. வி. பியினரின் வன்செயல்களைத் தொடர்ந்து மீண்டும் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

ஜே வி. பி வன்செயல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் தென்னிலங்கையின் ஏழு மாகாணங்களிலும் அமைதி நிலவியது.

எனினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் யுத்தத்தைச் சாட்டாக வைத்து தெற்கிலும் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது

தென்னிலங்கையில் வன்செயல்கள் எதுவும் இடம்பெறாததால், அங்கு அமைதி நிலவுவதால் அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தபோதிலும்—

எதிரணியினர் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்காகவும், அரசியல் பழிவாங்குதல்களை மேற்கொள்வதற்காகவும் பிரேமதாசா அரசு அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து அமுல் செய்து வந்தது.

இந்த நிலைமையை மாற்றி, யுத்தம் நடக்கும் வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கு மட்டுமே அவசரகாலச் சட்டத்தை மட்டுப்படுத்தி, தென்னிலங்கையில் அதனை நீக்கிவிடுவதற்கு அரசு ஆலோசித்து வருகிறதாம்.

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் கூட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி நடைபெற இருக்கும் வேளையில் இப்படி ஓர் ஆலோசனை அரசுக்கு உதித்திருப்பது உதவியைப் பெறுவதற்கு ஆதரவு தேடும் [illegible] விப்பே என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# வதிவிட வேளாண்மைப் போட்டி: மட்டுவிலில் இன்று பரிசளிப்பு விழா

யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட 1993 ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மை போட்டியில் மாவட்ட மட்டத்திலும், கோட்ட, வட்டு மட்டங்களிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று இரவு 7.45 மணிக்கு மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு. ந. அருள்நேசன் தலைமையில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், தென்மராட்சி தளபதி பரணி ஆகியோர் பரிசில்களை வழங்குவார்கள். (ஒ-5)

# ஆர்.எஸ்.எஸ். மீதான தடை: விசாரணை மன்று தள்ளுபடி

இந்து மத அமைப்பான ராஷ்ட்ரிய சுயம் சேவக் (ஆர். எஸ் எஸ்) இயக்கத்தை தடை செய்து இந்திய அரசு விதித்த உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது

இந்த விடயம் குறித்து விசாரித்த முடிவு செய்வதற்காக இந்திய மத்திய அரசால் நியமிக்கப்பட்ட விசாரணை மன்றே தடை உத்தரவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

அயோத்தியில் பாபரி மசூதி இடிக்கப்பட்டதை அடுத்து, விஸ்வ ஹிந்து பரிஷத், ஆர். எஸ். எஸ். மற்றும் பஜ்ரங்தள் உட்பட பல இந்து மத அமைப்புகளை மத்திய அரசு தடை செய்தது தெரிந்ததே.

விஸ்வ ஹிந்து பரிஷத்துக்கு எதிரான தடை உத்தரவு நீக்கப்படவில்லை இந்தத் தடை உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய விஸ்வ ஹிந்து பரிஷத் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

# தமிழ் மருத்துவ நூல்கள் இங்கிருந்து தமிழ்நாட்டுக்கு!

சென்னை, ஜூன் 5

"இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஆயிரம் மருத்துவத் தமிழ் நூல்கள் உள்ளன. ஆனால் தமிழகத்தில் நூறு தமிழ் மருத்துவ நூல்கள் மட்டுமே உள்ளன"

"எனவே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இருந்து தமிழ் மருத்துவ நூல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

—எம் ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி. பி. ராஜன் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

தொண்டை சிகிச்சை நிபுணர் மு. குமரேசன் தமிழில் எழுதிய "செவிச் செல்வம்" என்ற நூலை வெளியிட்டு வைத்து திரு. பி. பி. ராஜன் பேசினார். அப்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

## பென்ஷன் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ் மாவட்ட ஓய்வூதியர்களுக்கான மே மற்றும் ஜூன் மாத வவுச்சர்கள் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும்என எதிர்பார்க்கப்படும் "குமாரி" கப்பலில் எடுத்து வரப்படுவதாகத் தெரியவந்தது. (உ 3)

# 9 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், கில்னர் லேன் மகமாரி அம்மன் கோவில் 9ஆம் திருவிழாவை முன்னிட்டு இன்று காலை 10.00 மணி அளவில் அபிஷேகம் நடைபெறும். மாலை 5.00 மணிக்கு அபிஷேகம், வசந்தமண்டப பூசை நடைபெற்று, சுவாமி உலாவரும் நிகழ்ச்சியும் இடம்பெறும்.

விசேட மேளக் கச்சேரிகளும், சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

தவில்:
N.R.S. சுதாகரன்
N.R.S. ரவீந்திரன்
K. நித்தியானந்தன்

நாதஸ்வரம்:
A. முருகானந்தம்
S. ஸ்ரீதரன்
N.K. கணேசன்

சமயச் சொற்பொழிவு:
காரைநகர் கம்பன்கழக அமைப்பாளர்
த. சிவகுமாரன்

(25987) 9ஆம் திருவிழா உபயகாரர்

# சைவசமயப் பரீட்சை

இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்படும் சைவசமய பாட அறிவு எழுத்துப் பரீட்சை 1993

பரீட்சை குறித்த தினத்தில் 6 - 6 - 93 ஞாயிறு மு. ப. 9.00 மணிக்கு நடைபெறும்.

சுட்டிலக்கத்தினையும் பரீட்சை நிலைய விவரத்தையும் பெறாத பரீட்சார்த்திகள் இணுவில் இளந்தொண்டர் சபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

இளந்தொண்டர் சபை

[25986]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 89/[illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org